பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 22 சனிக்கிழமை 08.10.2021 கதிர் 201

## வவுனியாவில் மேலும் 24 பேருக்குத் தொற்று

### ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 24 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளார் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

☞2

# மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த அரசு முடிவு!

### மார்ச்சுக்கு முன் நடக்கும் என பஸில் இன்று அறிவிப்பு
### சுமந்திரனின் தனி நபர் சட்டமூலமே பயன்படுத்தப்படும்

கொழும்பு,ஒக்ரோபர் 08

நிலுவையில் இருக்கும் மாகாணசபைத் தேர்தல்களை அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்தி முடிப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் கூட்டத்தில் அறிவித்தார்.

இதற்காக மாகாணசபைத் தேர்தல்கள் சட்டமூலம் புதிதாக நாடாளுமன்றில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டும். இவ்விடயத்தில் வீண் கால தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கும் தனிநபர் பிரேரணையைக் கையில் எடுத்து புதிய மாற்றங்களோடு அதை விரைந்து நிறைவேற்றுவதற்கு ஆராயப்படுவதாகவும் இன்று நாடாளுமன்ற தெரிவுக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

☞2

## பிரசாத்துக்கு பதவி உயர்வு



யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நாட்டில் 225 தலைமை பொலிஸ் பரிசோதகர்கள்,

☞2

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் இன்று போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்பாக இன்று காலை மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 5ஆம் திகதி இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகு, குருநகர் பகுதி மீனவர்களின் படகை நேராக மோதி சேதப்படுத்தியதோடு படகில் இருந்த குருநகர் மீனவர்களைத் தாக்க இந்திய மீனவர்கள்

☞2

## அமைச்சர் நாமல் கென்யாவுக்கு திடீர் விஜயம்!



உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கென்யாவுக்குச் சென்றுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் பதிவொன்றை இட்டுள்ளார்.

☞2

## 11 முதல் 15 வரை யாழ். பல்கலையில் மீண்டும் தடுப்பூசி!

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின்

☞2

## ஐஸ் போதைப்பொருள் விற்பனை; துன்னாலையில் பெண் சிக்கினார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி, துன்னாலையில் வீடொன்றில் ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருளும், ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 30 வயது பெண்ணே இன்று மதியம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

## மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை ஒக். 21 வரை நீடிப்பு

### ஜனாதிபதி கோட்டா அறிவிப்பு



மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை மேலும் ஒருவார காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.


இதன்படி ஒக்ரோபர் 21 ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான

☞2

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் தீயில் கருகிச் சாவு!

### பல கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை





நுவரெலியா மாவட்டத்தில் இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட - இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்துள்ளனர்.

தாய், 11 வயது மகள், ஒரு வயது ஆண் குழந்தை மற்றும் குறித்த பிள்ளைகளின் தாத்தா, பாட்டி ஆகியோரே இவ்வாறு தீயில் உடல் கருகி மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆர்.ராமையா (வயது 55), அவரின் மனைவியான

☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## 11 முதல் 15 வரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெறிப்படுத்தலில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை பல்கலைக்கழக சுகநல நிலையத்தில் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன. எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும், பணிபுரிவோரும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும், தடுப்பூசி ஏற்ற வரும்போது தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணங்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தடை தொடரும் என்று கொரோனாத் தடுப்புச் செயலணி தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், கடந்த ஓகஸ்ட் 21 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் தளர்த்தப்பட்டது.

எனினும், கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் தொடர்வதால், மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை ஒக்ரோபர் 14 ஆம் திகதி வரை தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் அதனை மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## ஒரே குடும்பத்தைச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முத்துலெட்சுமி (வயது 50), இவர்களின் மகள் டிவனியா (வயது 32) மற்றும் குறித்த மகளின் பிள்ளைகள் இருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், உயிரிழந்த ஆர்.ராமையாவின் மகனான ரவீந்திரன் (வயது 30) உயிர் தப்பியுள்ளார். இதேவேளை, சம்பவம் இடம்பெற்றபோது ராமையாவின் மகளின் கணவர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

ராகலை, முதலாம் பிரிவு தோட்டத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. பல கோணங்களில் தீவிர பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

## வவுனியாவில் மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தாமாக முன்வந்து பரிசோதனை செய்தவர்களின் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 24 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியா, செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்தவரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## பிரசாத்துக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக (ஏ.எஸ்.பி.) பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## இந்திய மீனவர்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயன்றிருந்தனர்.

குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மீனவர் சங்கங்களின் ஏற்பாட்டில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"எமது கடல் வளங்களை அழிக்காதே, இலங்கை அரசே இந்திய இழுவைப் படகுகளைத் தடுத்து நிறுத்து, எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி வெளிநாட்டு மீனவர்களை அனுமதிக்காதே, இலங்கை அரசே உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்து, கடல் வளத்தைச் சுரண்டி எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே" போன்ற பல்வேறு கோஷங்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் எழுப்பப்பட்டன.

போராட்டத்துக்குப் பின்னர் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## அமைச்சர் நாமல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் கென்யாவின் நைரோபிக்கு நேற்று சென்றுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது போன்றே மக்கள் சமூகத்தினரிடையிலான நட்புறவை மேலும் வளர்த்துக்கொள்ளும் வகையிலான பயன்மிக்க பல சந்திப்புகளிலும் கலந்துகொள்ள எதிர்பார்க்கின்றேன் என்றும் அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முறைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டம் இன்று நாடாளுமன்றில் நடைபெற்றது. இந்தத் தெரிவுக்குழுவுக்கு புதிதாக சேர்க்கப்பட்ட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், எதிர்க்கட்சி உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் இன்றைய கூட்டத்திற்கு முதல்தடவையாக சமுகம் தந்தனர். அச்சமயத்தில் மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்துவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக பஸில் ராஜபக்ஷ கூறினார். எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசு தீர்மானித்து இருப்பதாகவும், அதற்காக மாகாணசபைத் தேர்தல் சட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர் அங்கு சொன்னார். இந்த விடயத்தில் சில சமயங்களில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு தேவைப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அச்சமயம் அங்கு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், அத்தகைய சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயம் அல்ல என்று விளக்கினார்.

இது தொடர்பில் தாம் ஒரு தனிநபர் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பித்து இருக்கிறேன் எனவும், கால விரயத்தை தடுப்பதற்காக அதையே தேவையான மாற்றங்களோடு சமர்ப்பித்து நிறைவேற்றலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தக் கருத்துக்களை கூட்டத்தில் பங்குபற்றிய சட்ட மா அதிபரின் பிரதிநிதியும் அங்கீகரித்தார். மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயம் அல்ல என்று குறிப்பிட்ட சுமந்திரன், அப்படி தேவைப்பட்டாலும் கூட, கூட்டமைப்பு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி,ஜே.வி.பி. எல்லாமே ஒரேயடியாக ஆதரவு தர முன்வந்து இருக்கின்றன என்பதால் மூன்றில் இரண்டு பங்கு அல்ல,அதையும் தாண்டி முழு நாடாளுமன்றத்தின் ஆதரவுடனும் இத்தகைய சட்டமூலத்தை விரைந்து நிறைவேற்ற முடியும் என்றும் கூறினார். ஏனைய உறுப்பினர்களும் அந்தக் கருத்தை அங்கீகரித்தனர்.

இதேவேளை இதுவரை இருந்த தேர்தல் சட்டத்தை அப்படியே மீண்டும் சட்டமாக்கினால் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் விடயம் அதில் வராது என்பதை சுட்டிக்காட்டினார் பஸில் ராஜபக்ஷ.

முதலில் பழைய சட்டத்தை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வந்து, பின்னர் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகளைப் புதிய சட்டம் மூலமாகச் சமர்ப்பித்து நிறைவேற்றலாம் என்றார் சுமந்திரன்.

அந்தக் கருத்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

புதிய சட்ட மூலங்களை ஒழுங்குபடுத்தும் ஏற்பாடுகளை சட்ட மா அதிபர் திணைக்களம் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் சேர்ந்து மும்முரமாக ஈடுபடும் எனத் தெரிய வருகிறது

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசுக்கு எதிர்ப்பு

இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களே இப்போது அரசையும் ஆட்சித் தலைமையையும் திட்டித் தீர்க்கும் நிலைமையைப் பார்க்கின்றோம்.

“அரசின் தற்போதைய செயற்பாடுகளால் வெட்கித் தலை குனிகிறேன். நாட்டின் தேசிய சொத்துகளை விற்று, தமக்கு வாக்களித்த மக்களை அவமானப்படுத்துகின்றனர் இந்த ஆட்சியாளர்கள்” என்று சீறுகின்றார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

“தற்போதைய அரசை ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களை அரசுத் தலைவர்கள் மறந்துவிட்டார்கள். அப்பட்டமான பொய்களைக் கூறி ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆனால் இன்று மக்களுக்கு நம்பிக்கையாக, நீதியாக அவர்கள் நடக்கவில்லை. மீண்டும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டால் அவர்களுக்கு என்ன பதில் கிடைக்கும் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் அரசின் செயற்பாடுகளால் நாட்டுக்கே வெட்கம்” என்றும் அவர் கூறுகிறார்.

ஞானசாரர் மாத்திரம் அல்லர். ராஜபக்ஷ தரப்பினருக்குக் கடந்த தேர்தலின்போது ஆதரவாக நின்ற பலர் – பெரும்பாலும் பௌத்த பீடத்தினர் – இப்போது ராஜபக்ஷ அரசின் நடவடிக்கைகளினால் பெரிதும் அதிருப்தி அடைந்து, ஆட்சிப் பீடத்துக்கு எதிராகத் திரும்பிப் பகிரங்கமாக கருத்து வெளியிட்டு வருகின்றமை அவதானிக்கப்படுகின்றது.

குறிப்பாக ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக கடந்த பொதுத்தேர்தலின் போது கடுமையாக உழைத்த நாரஹேன்பிட்டி அபேராம விகாரையின் விகாராதிபதி ஆனந்த முருத்தெட்டுவே தேரர் மற்றும் பௌத்தலோக மாவத்தை விகாரையைச் சேர்ந்த எல்லே குணவங்ஸ தேரர் போன்றோர் இப்போது அரசுக்கு எதிராக – இன்றைய ஆட்சிப் பீடத்திற்கு மாறாக – கடும் கண்டனக் கணைகளைத் தொடுத்து வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஆனந்த தேரர் இலங்கை அரசியலில் காத்திரமான பங்களிப்பை வழங்குபவர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு ஓர் எம்.பியாகக் கூட அவர் இல்லாத நிலையில், அவர் கொழும்பில் செயற்படுவதற்கான களத்தையும் தளத்தையும் தமது விகாரையில் கொடுத்து, அவருக்கு அச்சமயத்தில் பக்கபலமாக நின்று உதவியவர் இந்த ஆனந்த தேரர்தான்.

அவரே பொதுவெளியில் ராஜபக்ஷக்களை மிக மோசமாக விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளார்.

அதே தேரர் கடந்த வாரம் எதிரணியின் முக்கிய தலைவர்களை அழைத்துத் தமது விகாரையில் ஒரு முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்தி இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா, முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, ஐக்கிய தேசியக் கட்சியின் அகில விராஜ் காரியவசம் மற்றும் அரசுத் தரப்பில் இருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ,தமிழர் தரப்பில் தலைவராக இருக்கின்ற மனோ கணேசன் உட்பட முக்கிய தலைவர்களைக் கூப்பிட்டு அவர் மந்திராலோசனை நடத்தி இருக்கிறார்.

இந்த விடயங்கள் ஆட்சியாளர்களுக்கு எதிரான ஒரு வலுவான எதிர்ப்பு எதிரணியில் மட்டுமல்லாமல் பௌத்த பீடங்கள் மட்டத்திலும் கிளம்பியுள்ளது என்பதற்கு வலுவான சான்றாக உள்ளன.

இப்போது ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தென்னிலங்கையில் கிளர்ந்து வரும் எதிர்ப்புணர்வு, அரசு விரைவில் நடத்த உத்தேசித்திருக்கும் மாகாண சபைத் தேர்தல்களின் போது அரசுக்கு எதிரான மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம். அதனால் மாகாணத் தேர்தல் பற்றி இப்போது பேசும் அரசு, கடைசி நேரத்தில் அந்த முயற்சிகளில் இருந்து பின் வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# கொழும்பு துறைமுக நகரை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது அமெரிக்கா!

## தூதுவர் ஹெலைய்னா எச்சரிக்கை



இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட துறைமுக நகரம் தொடர்பான சட்டமூலத்தில் உள்ள சில விடயங்கள் தொடர்பாக அமெரிக்கா தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஹெலைய்னா பீ. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள முடிந்த நபர்கள், சட்டவிரோத நிதிநடவடிக்கைகள் மற்றும்கறுப்புப்பணத்தை வெள்ளையாக்கும் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கல்வி நிலையம் ஒன்றுடன்நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமெரிக்க நிறுவனங்கள் இது தொடர்பாகக் கவனமாக இருக்க வேண்டும். இலங்கையில் முதலீடு செய்ய எண்ணும் அமெரிக்க நிறுவனங்கள் தாம் முதலீடு செய்ய போகும் சூழல் தொடர்பாகத் தெளிவான புரிதல் இருப்பது அத்தியாவசியம். அவர்கள் முதலீடு செய்யும் முகவர் நிறுவனங்களின் பங்குதாரர்கள், அதன் பணிப்பாளர் சபைகளுடன் தமக்கு பிரச்சினை ஏற்படுமா என்பது மாத்திரமல்ல ஆபத்தை எதிர்நோக்க நேரிடுமா என்பது அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

வர்த்தகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக வெளிநாட்டு அதிகாரி ஒருவருக்கு பணத்தைச் செலுத்துவதாக உறுதியளிப்பது அமெரிக்காவின் வெளிநாட்டு ஊழல் சட்டத்தின் படி சட்டவிரோத நடவடிக்கையாகும் எனவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான மிகப்பெரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டத்துக்காக சட்டம் மற்றும் விதிமுறைகளை உரிய முறையில் உருவாக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

சட்டவிரோதச் செயற்பாடுகள் மற்றும் அநீதியான போட்டிகளுக்காக கதவு திறக்கப்படவில்லை என்பதை இலங்கை உறுதிப்படுத்த வேண்டியது முக்கியமானது எனவும் அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கு தடுப்பூசியின் 3 ஆவது டோஸ் செலுத்துவது குறித்து ஹேமந்த விளக்கம்



இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியின் மூன்றாவது டோஸை செலுத்துவது தொடர்பாக ஆரம்பக்கட்ட வைத்திய ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

20 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசியின் மூன்றாவது டோஸை வழங்குவது தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியின் மூன்றாவது டோஸை செலுத்துவது தொடர்பில் ஆரம்பக்கட்ட வைத்திய ஆலோசனை மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வாறு பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவதாயின் விசேட தேவையுடைய மற்றும் நாள்பட்ட நோயுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அதன் பின்னர் கட்டம் கட்டமாக ஏனையோருக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் மூன்றாவது தடுப்பூசி செலுத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித அறிவித்தலும் கிடைக்கப்பெறவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வழிபாட்டுத் தளங்களில் ஒன்று கூடுவதற்கு தடை

வவுனியா இந்து ஆலயங்களில் நவராத்திரி பூஜையில் மூவருடன் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்று வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்–

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுகாதாரத்துறையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அரச சுற்றறிக்கையில் வழிபாட்டுத் தளங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடி வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் மூவருடன் வழிபாட்டுத்தளங்களில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்ற ஒரு தகவல் வெளியாகியுள்ளது. இது அரச சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்தத்தகவல் உண்மைக்குப் புறம்பானது என்பதை தெளிவுபடுத்திய சுகாதாரத்துறையினர் பொதுமக்கள் ஆலய வழிபாடுகளில் அதனையும் மீறி ஒன்றுகூடினால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவித்துள்ளனர்.

# இந்திய இராணுவத் தளபதி நரவனே இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம்

இந்திய இராணுவத்தளபதி, ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வருகின்றார். ஒக்ரோபர் 12 ஆம் திகதி அவர் இலங்கை வருவார் என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

ஜெனரல் நரவனே, இந்த பயணத்தின் போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கூட்டுப் பயிற்சியான ‘மித்ரா’ சக்தியின் தொடர்ச்சியான 8 ஆவது கட்டத்தையும் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் இலங்கையில் அரசியல் தலைவர்கள் மற்றும் படைத் தளபதிகளையும் அவர் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# பிரான்ஸ் பாலியல் துஷ்பிரயோக விவகாரம் அவமானத்துக்கான தருணம் -போப் ஆண்டவர்



பிரான்ஸில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட விவகாரம் அவமானத்துக்கான தருணம் என போப் ஆண்டவர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

உலக அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்த விவகாரம் தொடர்பாக போப் ஆண்டவர் பிரான்சிஸ் கூறுகையில், 'பாதிக்கப்பட்டவர்களுக்குஎனதுவருத்தத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். தேவாலயத்தின் இயலாமைக்காகவும், பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் தேவாலயங்கள் நிற்காததற்கும், நீண்டகாலமாக, பாதிக்கப்பட்டவர்களைக் கவலையில் வைத்திருந்ததற்காகவும் நான் அவமானம் கொள்கிறேன். இது அவமானத்துக்கான தருணம்' என கூறினார்.

பிரான்ஸில் கத்தோலிக்க மதகுருமார்களால் சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர் என சமீபத்தில் வெளியான விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜீன் மார்க் சாவ் தலைமையில் இரண்டு ஆண்டுகளாகத் தனியார் விசாரணைக் குழு நடத்திய ஆய்வு முடிவில், 'ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களில், உலகெங்கிலும் தொடர்ச்சியான பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்து வருவதைத் தொடர்ந்து இந்த விசாரணை நடத்தப்பட்டது. பிரான்ஸில் கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக, இந்தப் பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்து வருகின்றன.

பிரான்ஸில் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தைச் சேர்ந்த 3,000 பாதிரியார்களும், பிற ஊழியர்களும் இந்தப் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டுள்ளனர். 1950ஆம் ஆண்டு முதல் இதுவரை இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# எந்த எல்லைக்கும் செல்வோம் சீனாவுக்கு தாய்வான் எச்சரிக்கை!

தாய்வான் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்றால் அதனால் ஆசியப் பிராந்தியத்தின் அமைதிக்கு பேரழிவு ஏற்படும் என தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் எச்சரித்துள்ளார்.

தாய்வான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எதை வேண்டுமானாலும் செய்யும். எந்த எல்லைக்கும் செல்லும் என வெளிவிவகார அமைச்சின் ஊடகத்தில் ஜனாதிபதி சாய் இங்-வென் இன்று செவ்வாய்க்கிழமை எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தாய்வான் தனது இறையாண்மைக்கு உட்பட்ட பகுதி என சீனா தொடர்ந்து உரிமை கோரி வருகிறது. ஆனால் தாங்கள் இறைமையுள்ள தனி நாடு என தாய்வான் உறுதியாகக் கூறி வருகிறது.

இந்நிலையில் தாய்வானை அச்சுறுத்தும் வகையில் அதன் வான்வெளியில் தனது விமானங்களை அடிக்கடி அனுப்பி அந்நாட்டின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் சீனா நடந்து வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பீஜிங்கிடம் இருந்து பெரிய அழுத்தத்தை தாய்வான் எதிர்கொண்டு வருகிறது. வெள்ளிக்கிழமை முதலான நான்கு நாள்களில் மட்டும் தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலத்தில் 148 சீன விமானப்படை போர் விமானங்கள் நுழைந்து வெளியேறியுள்ளன.

இந்நிலையில் சீனா திட்டமிட்டு பதற்றத்தை உருவாக்கி வருவதாக தாய்வானின் முக்கிய சர்வதேச ஆதரவு நாடான அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை, சீனாவின் அச்சுறுத்தலை சர்வதேச நாடுகள் கண்டுகொள்ளாமல் இருக்கின்றமை பேரழிவுகளுக்குவழிவகுக்கும். இதுஜனநாயகத்துக்கு பேராபத்தாக அமையும். ஜனநாயகத்தின் மீதான சர்வாதிகாரத்தின் ஆதிக்கத்தை உணர்த்தும் வகையில் சீனாவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன எனவும் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-



வென் எழுதியுள்ள கட்டுரையில் கூறியுள்ளார்.

தாய்வான் சீனாவின் ஒரு பகுதி என்பதை ஏற்க சாய் இங்-வென் மறுத்து வருவதால் அவரை பிரிவினைவாதி என சீனா விமர்சித்து வருகிறது.

ஆனால் தாய்வான் ஒரு இறைமையுள்ள சுதந்திர நாடு. அது எந்தவொரு நாட்டின் பகுதியும் அல்ல என சாய் இங்-வென் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். தாய்வான் இராணுவ ரீதியான மோதலை விரும்பவில்லை. சீனா உட்பட அண்டை நாடுகளுடன் பரஸ்பரம் நன்மை பயக்கும் நல்லுறவையே விரும்புகிறது.

ஆனால் தாய்வானின் ஜனநாயகம் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் எங்களை நாங்கள் தற்காத்துக் கொள்ள எதை வேண்டுமானாலும் செய்வோம் எனவும் சாய் இங் – வென் எச்சரித்துள்ளார்.

சிக்கல்களுக்குத் தீர்வு காண பேச்சுக்கு வருமாறு சீனாவுக்கு சாய் இங்-வென் மீண்டும் அழைப்பு விடுத்தார். ஆனால் இவ்வாறான அழைப்புக்களை சீனா பலமுறை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சீனாவுடன் அமெரிக்கா போர் புரியும்; ட்ரம்ப் எச்சரிக்கை!

சீனாவுடன் அமெரிக்கா நிச்சயம் போர் புரியும் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி தலைமையில் சீனாவுடனான உறவு குறித்து ட்ரம்ப் கூறுகையில், 'தேர்தல் மோசடி செய்யப்பட்டதால், அமெரிக்கா இப்போது பலவீனமான மற்றும் ஊழல் நிறைந்த தலைமையைக் கொண்டிருக்கிறது.

இதனால் சீனா அமெரிக்காவை மதிப்பதில்லை. சீனாவுடன் அமெரிக்கா நிச்சயம் போர் புரியும்' என கூறினார்.

தாய்வான் அருகே, சீன விமானப்படை எண்ணற்ற போர்ப்பயிற்சிகளைமேற்கொண்டது. இதனால், அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதனை தணிக்கும் வகையில், அமெரிக்கா மற்றும் சீன நாடுகளின் உயரதிகாரிகள் இடையே சுவிஸ்லாந்தில் பேச்சு நடைபெறவுள்ளது.

இந்தச் சூழலில், முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், சீனாவுடன் அமெரிக்கா போர் தொடுப்பதில் சென்று முடியும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஆசியாவின் முதல் பறக்கும் கார்; சென்னை நிறுவனம் அறிமுகம்

லண்டனில் நடைபெற்ற உலகின் மிகப்பெரும் ஹெலிடெக் விழாவில் சென்னையைச் சேர்ந்த விணாடா ஏரோமொபிலிட்டி நிறுவனம் ஆசியாவின் முதல் ஹைப்ரிட் பறக்கும் காரின் ப்ரோடோடைப் மாடலை அறிமுகம் செய்தது. பறக்கும் காரின் டிஜிட்டல் ப்ரோடோடைப் வீடியோவை அந்நிறுவனம் தனது யூடியூப் சனலில் பதிவேற்றம் செய்து இருக்கிறது. அதில் காரின் கேபின் மற்றும் இருக்கை அமைப்பு எவ்வாறு உள்ளது என தெளிவாக தெரிகிறது. இந்த காரில் இருவர் பயணிக்க முடியும். இதன் கதவுகள் இறக்கை போன்று திறக்கும்படி வடிவமைக்கப்பட்டு உள்ளது.இந்த பறக்கும் கார் தொடர்ச்சியாக 60 நிமிடங்களுக்கு மணிக்கு சுமார் 120 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் திறன் கொண்டிருக்கிறது. மேலும் இது தரையில் இருந்து சுமார் 3 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும். இந்த கார் இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரம் கொண்டு இயங்குகிறது.விணாடாவின் பறக்கும் கார் ப்ரோடோடைப் 2023 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.சென்னையைச் சேர்ந்த நிறுவனம் உருவாக்கி இருக்கும் இந்த பறக்கும் கார் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட இருக்கிறது.



# ஆபிரிக்க குழந்தைகளுக்கு செலுத்தப்படும் உலகின் முதல் மலேரியா தடுப்பூசி!

கொடிய மலேரியா நோய்க்கான உலகின் முதல் மலேரியா தடுப்பூசி, ஆபிரிக்க குழந்தைகளுக்கு செலுத்தப்படவுள்ளது.

மலேரியா காய்ச்சலைத் தடுப்பதற்காக மாஸ்குயிரிக்ஸ் என்ற தடுப்பூசியை கிளாக்ஸோ ஸ்மித்கிளைன் நிறுவனம் கடந்த 1987இல் உருவாக்கியது. அந்த தடுப்பூசியின் செயற்திறன் குறைவாக இருந்ததால், அதை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 2019இல் இருந்து கானா, கென்யா, மாலவி ஆகிய நாடுகளில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு மலேரியா தடுப்பூசி செலுத்தப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆராய்ச்சியில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் இந்த தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு உலக சுதாகார அமைப்பு ஒப்புதல் அளித்தது. இந்தநிலையில், முதல் முறையாக, ஆபிரிக்க குழந்தைகளுக்கு மலேரியா தடுப்பூசி, செலுத்தப்படவுள்ளது.

'இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்' என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தடுப்பூசி செலுத்துவதில் தயக்கம் காண்பிப்போர் இந்தியாவில் 7 சதவீதம் மட்டுமே என தகவல்



இந்தியாவில் 7 சதவீதம் பேர் மட்டுமே தடுப்பூசி போடுவதில் தயக்கம் காட்டுகின்றனர் என புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் கடந்த ஜனவரி மாதம் கொரோனாத் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்தபோது, அதை செலுத்திக் கொள்வதில் 60 சதவீதம் பேர் தயக்கம் காட்டி வந்தமை தரவுகளின்மூலம் அறியப்பட்டது. ஆனால் தடுப்பூசி மீதான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் பெரும் சேதத்தை உருவாக்கிய இரண்டாவது அலை போன்ற காரணங்களால் தடுப்பூசி மீதான ஆர்வம் மக்களிடையே அதிகரித்தது.

இந்த நிலையில் தற்போது இந்தியாவில் தடுப்பூசி போடுவதற்கான ஆர்வம் எவ்வாறு இருக்கிறது என்பதைக் கண்டறிய 'லோக்கல் சர்க்கிள்ஸ்' என்ற நிறுவனம் ஆய்வு நடத்தியது. நாடு முழுவதும் 301 மாவட்டங்களில் 12,810 பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 18 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் வெறும் 7 சதவீதத்தினர் மட்டுமே தடுப்பூசி போடுவதில் தயக்கம் காட்டுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது. பாதுகாப்புக் கவலை, தடுப்பூசிகளுக்கான அவசர பரிசோதனை, அவசர ஒப்புதல், பக்கவிளைவுகள் போன்ற காரணங்களை தங்கள் தயக்கத்துக்கான அடிப்படைகளாக அவர்கள் கூறியுள்ளனர்.

அதேநேரம் தற்போதைய மற்றும் எதிர்கால உருமாறிய தொற்றுகளை தடுப்பதற்கு தற்போதைய தடுப்பூசிகள் செயல்திறன் உள்ளதாக இல்லை என முடிவு செய்து 27 சதவீதத்தினர் தடுப்பூசி போடுவதற்கு இதுவரை திட்டமிடவில்லை எனவும் கூறியுள்ளனர். எனினும், இவர்கள் தற்போதைய தடுப்பூசிகளின் செயல்திறன் குறித்த கூடுதல் தகவல்கள் மற்றும் வீரியமிக்க வேறு தடுப்பூசிகள் கிடைத்தால் தடுப்பூசி போடுவது குறித்து பரிசீலிக்க வாய்ப்புள்ளவர்கள் என 'லோக்கல் சர்க்கிள்ஸ்' நிறுவன தலைவர் சச்சின் தபரியா கூறினார்.

இந்தியாவில் 18 வயதுக்கு மேற்பட்டோர் தொகை 94 கோடியாக இருக்கும் நிலையில், இதில் 68 சதவீதத்தினர் ஒரு டோஸ் தடுப்பூசியாவது செலுத்திக் கொண்டிருக்கின்றனர் எனத் தரவுகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# விவசாயிகள் மீது வாகனம் மோதும் தெளிவான காணொலி வெளியானது

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தின் லகிம்பூர் கெரி மாவட்டத்தின் லகிம்பூரில் கடந்த 10 ஆம் திகதி பா.ஜ.க. மத்திய இணையமைச்சரின் மகன் சென்ற வாகனம் விவசாயிகள் மீது மோதிய அனர்த்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் விவசாயிகள், பத்திரிகையாளர் உள்பட 9 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தில் மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா மீது கொலைக்குற்றச்சாட்டு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், விவசாயிகள் மீது பா.ஜ.கவினர் சென்ற வாகனம் மோதும் காணொலி சில நாள்களுக்கு முன்னர் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தக் காணொலியில் காட்சிகள் தெளிவற்ற தன்மையுடன் பதிவாகியிருந்ததால் அதில் இருப்பவர்கள் பற்றிய குழப்பமான தகவல்கள் பரவின. இந்தநிலையில், விவசாயிகள் மீது பா.ஜ.கவினரின் வாகனம் மோதித்தள்ளும் தெளிவான காணொலியொன்று தற்போது வெளியாகியுள்ளது.

தற்போது வெளியாகியுள்ள புதிய காணொலியில் இந்திய மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா பயணம் செய்தார் எனக் கூறப்படும் காருக்கு முன்னாள் சென்ற வாகனமொன்று சாலையில் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது வேகமாக மோதிச்சென்ற தெளிவான காட்சிகள் இடம்பெற்றுள்ளன. விவசாயிகள் மீது மோதிய வாகனம் நிற்காமல் வேகமாகத் தப்பிச் செல்வதும் அந்த காணொலியில் பதிவாகியுள்ளது.

# வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குகை இந்தியாவில் மீண்டும் ஆரம்பம்



வரும் 15ஆம் திகதி முதல் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய சுற்றுலா விசா வழங்கப்படும் என இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

கொரோனாப் பரவல் காரணமாக சுமார் ஒன்றரை ஆண்டாக வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவுக்குள் நுழைவதற்கான தடை அமுலில் உள்ளது. விசேட தேவைகளுக்காக அனுமதி பெற்றவர்கள் மட்டுமே சிறப்பு விமானங்கள் மூலம் இந்தியாவுக்குள் நுழைய முடியும் என்ற நிலை காணப்பட்டது. தடை அமுலாவதற்கு முன்னர் சுற்றுலா விசாவோடு இந்தியாவுக்குள் நுழைந்தவர்களுக்கு தேவைப்படின் விசா காலத்தை நீடித்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நிலையில், வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் சாதாரண சுற்றுலாப் பயணிகளுக்கும் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் விசா வழங்கப்படும் என இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தனி விமானங்களில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முதல் கட்டமாக ஒக்ரோபர் 15 முதல் புதிய விசாக்கள் வழங்கப்படும் எனவும் நவம்பர் 15 முதல் பிற விமானங்களிலும் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கு வர அனுமதி வழங்கப்படவுள்ளது எனவும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

# பெண்களைப் பற்றி அவதூறாக பேசிய வழக்கு ராஜாவுக்கு பிடியாணை பிறப்பித்தது நீதிமன்றம்



விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பா.ஜ.கவின் தேசிய செயலாளர் எச்.ராஜாவுக்கு பிணையில் வெளிவர முடியாத அளவுக்கான கைது உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில், இந்து முன்னணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் எச்.ராஜா, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் அவர்கள் வீட்டில் உள்ள பெண்களைப் பற்றி அவதூறாக பேசினார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து உதவி ஆணையாளர் ஹரிஹரன், விருதுநகர் பஜார் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் அடிப்படையில் அது தொடர்பான வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள நீதித்துறை நடுவர் எண் 2 சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது விசாரணைக்கு ஆஜராகாத எச்.ராஜாவுக்கு, பிணையில் வெளிவர முடியாத பிடியாணையைப் பிறப்பித்து நீதிபதி பரம்வீர் உத்தரவிட்டார். மேலும், வழக்கை வருகின்ற 27 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாகவும் அறிவித்தார்.



# போதைப்பொருள் பயன்படுத்திய வழக்கு ஷாருக்கான் மகனுக்கு 14 நாள் நீதிமன்றக் காவல்

போதைப்பொருள் வழக்கில் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானை 14 நாள் நீதிமன்றக் காவலில் எடுத்து விசாரிக்க மும்பை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மும்பையில் இருந்து கோவா சென்ற உல்லாசக் கப்பலில் போதைப் பொருள் பயன்படுத்தினார் என ஷாருக்கான் மகன் ஆர்யன் கான் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆர்யன் கான் பிணை கோரியிருந்த நிலையில் அவரை காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இதையடுத்து 3 நாள்கள் காவல் முடிந்ததும் ஆர்யன் கானை மும்பை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது தேசிய போதைப்பொருள் தடுப்பு ஆணையம். நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்ட ஆர்யன் கானை 14 நாள் நீதிமன்றக் காவலில் எடுத்து விசாரிக்க மும்பை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 3 மாதங்களுக்கு பின்னர் நடைபெற்றது திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம்!

## மட்டக்களப்பு மாவட்டத்தில்






கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த 3 மாதங்களாக இடம்பெறாதிருந்த மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டம் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலக ரீதியாக முன்வைக்கப்பட்டிருந்த 245 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமையுடன், பிரதேச செயலக ரீதியில் காணப்படுகின்ற அரச திணைக்களங்களுக்கான காணி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில், மாவட்ட பயன்பாட்டுக் குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சிபாரிசு வழங்கப்பட்டுள்ளன. மேலும் முதலீட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் குறுங்கால மற்றும் நீண்டகால குத்தகைக்கு காணிகளை வழங்குவது தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான மயானங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக காணிகளை பராதீனப்படுத்துதல் தொடர்பாகவும் இதன்போது பரிசீலனை செய்யப்பட்டு, சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 588 பாடசாலைகளை கிழக்கில் திறக்க முடிவு

கிழக்கு மாகாணத்தில் தரம் 1 – 5 வரையான வகுப்புகளைக் கொண்ட 200 மாணவர்களுக்குட்பட்ட 588 பாடசாலைகளைத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். பிள்ளை நாயகம் தெரிவித்துள்ளார். அதன்படி மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சிங்கள மொழி மூல 165 பாடசாலைகளையும், தமிழ் மொழி மூல 423 பாடசாலைகளையும் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்னர் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளதோடு, பாடசாலை வளாகம் முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்ட பின்னர் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைகளை ஆரம்பிக்கும் முன் குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

# வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவில் இலங்கை அரசு தோல்வியடைந்துள்ளது




வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவில் இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாக கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்னம் தெரிவித்துள்ளார்.

இந்தியா தொடர்பிலான இலங்கையின் முடிவுகளில் பல மாற்றங்களை இலங்கை எடுத்துள்ளதாகவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

இலங்கை அரசாங்கம் இந்த மாற்றங்கள் ஊடாக தமிழ் மக்கள், சிறுபான்மை இனங்கள் தொடர்பான விடயங்களிலும் யுத்தகாலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாதிப்புகள் தொடர்பான விடயங்களிலும் மாற்றங்களை கொண்டு வந்து சிறுபான்மையின மக்களின் மனங்களை வெல்ல வேண்டும்.

நாங்கள் வடக்கு, கிழக்கு தமிழ் தேசத்துக்கான போராட்டத்தினை முன்னெடுத்தாலும் அரசாங்கம் குறைந்தபட்சம் 13 ஆவது அரசமைப்பு சட்டத்தையாவது முழுமையாக அமுல்படுத்த முன்வர வேண்டும் என கூறியுள்ளார்.

# அம்பாறை ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தின் சுகாதார ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

அம்பாறை ஆயுர்வேத ஆராய்ச்சி நிலைய சுகாதார ஊழியர்கள், அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுத்தமையுடன் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றினையும் மேற்கொண்டனர்.

ஏனைய வைத்தியசாலைகளிலுள்ள சுகாதார ஊழியர்களுக்கு வழங்கப்படும் 7 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவினை, தமக்கும் வழங்குமாறு கோரியே இந்த வேலை நிறுத்த போராட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுகாதார ஊழியர்கள், வைத்தியசாலைக்கு முன்பாக தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மாவடிப்பள்ளியில் யானைகள் அட்டகாசம்

## வீட்டு மதில்கள் சேதம்

(எஸ் அஷ்ரப்கான்)

அம்பாறை மாவட்டத்தின், மாவடிப்பள்ளி வீட்டு குடியிருப்புகளை நோக்கி ஊடுருவிய காட்டு யானைகளின் நடமாட்டத்தால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர்.

காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி மக்கள் குடியிருப்பு பிரதேசத்தினுள் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை யானைகளின் அட்டகாசத்தால் வீட்டு மதில்கள் மற்றும் பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இரவு நேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தால் பயிர்கள் அதிகமாக சேதமாகியுள்ளதுடன் வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

மேலும் இரவுவேளைகளில் ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து குறித்த கிராமங்களுக்குள் வந்து சேதம் விளைவித்து வந்தன என மக்கள் தெரிவித்தனர்.

யானைகள் கூட்டம் வீட்டு மதிலை உடைத்து சேதம் விளைவித்ததோடு பயன் தரும் பயிர்களையும் மரங்களையும் துவம்சம் செய்து சென்றுள்ளன.

காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக கிராம சேவையாளரிடமும் பொலிஸாரிடமும் கிராம மக்கள் அறிவித்துள்ளோம் எனத் தெரிவித்தனர்.



# மட்டு. களுதாவளையில் விபத்து; ஒருவர் காயம்!

மட்டக்களப்பு- களுதாவளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) மாலை இடம்பெற்ற இந்த விபத்தில், ஆரையம்பதி பகுதியைச் சேர்ந்தவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுதாவளை பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒரு மோட்டார் சைக்கிள் சேதமடைந்துள்ளதுடன், அதில் வந்தவரே படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சாவ் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் இந்தியா - இலங்கை போட்டி சமநிலை



தெற்காசிய கால்பந்து சம்மேளன (சாவ்) சம்பியன்ஷிப் தொடரில் பலம்வாய்ந்த இந்திய அணிக்கு எதிரான போட்டியை இலங்கை அணி எந்தவித கோல்களும் இன்றி சமநிலையில் முடித்துக்கொண்டது.

ஏற்கனவே, தமது முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்விகண்ட இலங்கை வீரர்கள் மிகப் பெரிய பிஃபா தரவரிசையில் 107ஆவது இடத்தில் இருக்கும் இந்திய அணியை மாலைதீவுகளின் தேசிய கால்பந்து அரங்கில் எதிர்கொண்டனர். தமது முதல் போட்டியில் பங்களாதேஷுடன் 1-1 என்ற சமநிலை முடிவைப் பெற்ற இந்திய வீரர்கள் இலங்கை அணியை வீழ்த்தி தமது முதல் வெற்றியை பெறும் எதிர்பார்ப்புடன் களமிறங்கினர். முதல் பாதி முடியும்வரை இந்திய அணி வீரர்களே கோலுக்கான முயற்சிகளை அதிகளவில் மேற்கொண்டபோதிலும் இலங்கையணியின் பின்கள தடுப்பாட்ட வீரர்கள் வாய்ப்புக்களை வழங்கவில்லை. மத்திய களத்தில் இருந்து இந்திய வீரர்கள் உயர்த்தி அடித்த அனைத்துப் பந்துகளையும் கோல் காப்பாளர் சுஜான் சிறந்த முறையில் தடுத்திருந்தார். இதன் விளைவாக இந்திய வீரர்களின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிய முதல் பாதி இரு அணிகளுக்கும் கோல்கள் இன்றி நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதியிலும் இரு அணி வீரர்களும் கோலடிக்க எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. போட்டியின் உபரி நேரமாக மேலதிகமாக 8 நிமிடங்கள் வழங்கப்பட்ட போதும், அந்த நேரத்திலும் இந்திய வீரர்களின் கோல் முயற்சிகள் அனைத்தையும் இலங்கை வீரர்கள் தடுக்க போட்டி கோல்கள் எதுவும் இன்றி சமநிலையில் முடிவுற்றது. இந்தப் போட்டியின் சிறந்த வீரராக இலங்கை அணியின் பின்கள வீரர் டக்சன் பியுஸ்லஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தியாவுடனான போட்டியைச் சமன் செய்ததன் மூலம், இலங்கை அணி சாவ் சம்பியன்ஷிப் தொடரில் ஒரு புள்ளியைப் பெற்றுக்கொண்டது. தனது இறுதி லீக் போட்டியில் இலங்கை அணி 10 ஆம் திகதி, போட்டித் தொடரை நடத்தும் மாலைதீவுகள் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

## அடுத்த சுற்றுக்கான வாய்ப்பினை வலுப்படுத்திக்கொண்டது கொல்கத்தா



ஐ.பி.எல். தொடரில் நேற்றைய நாளில் நடந்த இரண்டாவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, அடுத்த சுற்றுக்கான வாய்ப்பினை பிரகாசமாக்கிக்கொண்டது.

இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்து, கொல்கத்தா அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 171 ஓட்டங்களைக் குவித்தது. சுப்மன் கில் 56 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் 38 ஓட்டங்களையும் எடுத்தனர். ராஜஸ்தான் அணியின் கிறிஸ் மோரிஸ், சேட்டன் சக்கரியா, ராகுல் தெவாட்டியா மற்றும் க்ளென் பிலிப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 16.1 ஓவர்கள்களிலேயே 85 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. ராகுல் தெவாட்டியா 44 ஓட்டங்களையும் சிவம் டுபே 18 ஓட்டங்களையும் எடுத்தனர். கொல்கத்தா அணியின் சிவம் மாவி 4 விக்கெட்டுக்களையும் லோக்கி பெர்குசன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய சிவம் மாவி தேர்வானார்.

இந்தப்போட்டியில் வெற்றிபெற்று தனது அடுத்த சுற்று வாய்ப்பினை கொல்கத்தா அணி வலுப்படுத்திக்கொண்டுள்ளது. இன்றைய மும்பை - ஹைதராபாத் அணிகளுக்கிடையிலான லீக் போட்டி முடிவில் அந்த வாய்ப்பு உறுதிசெய்யப்படும்.



## ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் உத்தியோகத்தர்களை அறிவித்தது ஐ.சி.சி.

ஐக்கிய அரபு இராச்சியத்திலும் ஓமானிலும் நடைபெறவுள்ள ரி-20 கிரிக்கெட் உலகக்கிண்ணத் தொடருக்கான போட்டி நடுவர்கள், மத்தியஸ்தர்கள் விவரங்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள இந்தப் பட்டியலில் 16 நடுவர்கள் மற்றும் 4 போட்டி மத்தியஸ்தர்கள் இடம் பெற்றுள்ளனர். 45 போட்டிகள் கொண்ட இந்தத் தொடருக்கான நடுவர் குழாமில் அலிம் தார், மரய்ஸ் எரஸ்மஸ் மற்றும் ரொட் டக்கர் ஆகியோர் தங்களுடைய ஆறாவது ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பணியாற்றவுள்ளனர்.

ஓமானின் மஸ்கட் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய், ஷார்ஜா மற்றும் அபுதாபி மைதானங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் நவம்பர் 14 ஆம் திகதிவரை உலகக்கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இலங்கையின் குமார் தர்மசேன, ஓமான் மற்றும் பப்புவா நியூகினியா அணிகளுக்கு இடையிலான முதல் போட்டியில் நடுவராக செயற்படவுள்ளார். இவருடன் நியூசிலாந்தின் கிரிஸ் கஃபனி கள நடுவராக செயற்படவுள்ளார். இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல போட்டி மத்தியஸ்தராகவும், ரிச்சர்ட் கெட்டில்பொரோ மற்றும் அஷான் ரஸா ஆகியோர் முறையே மூன்றாவது, நான்காவது நடுவர்களாகவும் செயற்படவுள்ளனர்.

சுப்பர் 12 சுற்றுக்கான முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டியின் கள நடுவர்களாக மரய்ஸ் எரஸ்மஸ் மற்றும் அலிம் தார் ஆகியோரும், மூன்றாவது நடுவராக கிரிஸ் பிரவுனும், போட்டி மத்தியஸ்தராக டேவிட் பூனும் பணியாற்றவுள்ளனர்.

முதல் சுற்று மற்றும் சுப்பர் 12 சுற்றுக்களுக்கான தங்களது உத்தியோகத்தர் குழுவை அறிவித்துள்ள ஐ.சி.சி., அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கான குழு விரைவில் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள உத்தியோகத்தர் விவரம் -

போட்டி மத்தியஸ்தர்கள் - டேவிட் பூன், ஜெப் கிரவுன், ரஞ்சன் மடுகல்ல, ஜவகல் ஸ்ரீநாத்.

நடுவர்கள் -கிரிஸ் பிரவுன், அலீம் தார், குமார் தர்மசேன, மரய்ஸ் எரஸ்மஸ், கிரிஸ் கஃபனி, மைக்கல் கோக், அட்ரைன் ஹோல்ட்ஸ்டொக், ரிச்சர்ட் இல்லிங்வொர்த், ரிச்சர்ட் கெட்டில்பொரோ, நிதின் மேனன், அஷான் ரஸா, போல் ரீபில், லங்டொன் ருஸரெ, ரொட் டக்கர், ஜோயல் வில்ஸன், போல் வில்ஸன்.

## சென்னை அணியை தனியாளாக நின்று விரட்டியடித்து வென்ற கே.எல்.ராகுல்!

டுபாயில் நேற்று நடைபெற்ற 53ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் மோதியிருந்தன. இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. டு பிளெஸிஸ் 76 ஓட்டங்களையும் ஜடேஜா ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும் எடுத்தனர். பஞ்சாப் கிங்ஸ் அணியின் அர்ஸ்தீப் சிங் மற்றும் கிறிஸ் ஜோர்டன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி, 13 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. தனியொருவராக நின்று அசத்திய அணித்தலைவர்



கே.எல்.ராகுல் ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களையும் எய்டன் மார்க்ரம் 13 ஓட்டங்களையும் சேர்த்தனர். சென்னை அணியின் சர்துல் தாகூர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக 42 பந்துகளில் 8 சிக்ஸர்கள் 7 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களை எடுத்த கே.எல். ராகுல் தெரிவானார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வணிகக் கல்விக்கும் கல்வி நிர்வாகத்துக்கும் மலையகத்தில் ஒளியூட்டிய வடக்கின் வசந்தம்

காரிய சித்தியும் தொழில் திறனும் நுண்ணறிவும் கொண்ட ஆசான் திரு பற்றிக் இயூஜின் ஜெரால்ட் சுரேந்திரன் அவர்கள் 35 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.



மலையகக் கல்விப் புலத்தில் வணிகத் துறையில் ஆசிரியராய், ஆசிரிய ஆலோசகராய், கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக தன் சேவையை நிலைநிறுத்தி, இறுதி காலத்தில் வடமாகாணத்தில் ஆளுமைமிக்க மாகாண திட்டமிட்டல் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெறுகின்றார்.

கணக்கியல் துறையில் மலையகத்தில் சாதனை மிக்க ஆசிரியர்களையும், வங்கியியலாளர்களையும், கணக்கியலாளர்களையும், பல முதலீட்டாளர்களையும் உருவாக்கிய பேராசான் யாழ் மண்ணில் 1961 ஐப்பசி 10 இல் பிறந்து தன் ஆரம்பக்கல்வி முதல் கொண்டு உயர் கல்வி வரை யாழ் பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். இவர் கல்லூரியின் முதல் வணிகத் தொகுதியில் தூய கணிதத்தையும் ஒரு பாடமாக கற்று பல்கலைக்கழகம் தெரிவான முதல் மாணவன் ஆவார். வகுப்புத் தலைவராக, மாணவத் தலைவராக, விளையாட்டு வீரராக, பல்துறை கலைஞனாக சிறந்து விளங்கி, பல்கலைக்கழக காலங்களில் பல முற்போக்கு சிந்தனையுடன் சமூகசேவையினூடாக திருப்தி கண்டு வளர்ச்சிப்பெற்ற ஆசான். எதையும், எந்த இடத்திலும், யாருக்கும் அச்சமின்றி துணிந்து தன் கருத்தை முன்வைக்கும் தன்மை அன்று தொடக்கமே அவரிடம் காணப்பட்டது.

பல்கலைக்கழக மாணவனாக இருக்கும் காலத்தில் இளம் பத்திரிசியார் கழகத்தினூடாக வறிய மாணவர்களது கல்வி அறிவை நிரப்பியவர்களுள் ஒருவர். யாழ் பல்கலைக்கழகத்தில் வணிக இளமாணிப் பட்டத்தை நிறைவுசெய்து தான் கற்ற கல்லூரியில் 5.06.1986 தொடக்கம் தன் ஆசிரியர் பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து அரச ஆசிரிய சேவையில் நியமனம் பெற்று 20.01.1989 தொடக்கம் ஹற்றன் ஹைலண்ஸ் கல்லூரியில் வணிக பாட ஆசிரியராக கடமையேற்றார்.

அக்காலத்தில் கல்லூரியில் பல இளம் ஆசிரியர்களுடன் இணைந்து பல புதிய திட்டங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தியமையுடன் கணணித் துறையிலும் தேர்ச்சிப்பெற்று சீடா செயற்திட்டத்தினூடாக பல செயலமர்வுகளையும் நடத்தினார். அகில இலங்கை தமிழ் தின விவாதப் போட்டியில் தங்கப்பதக்கம் பெறுவதற்கும், முறையான பாடசாலை பரிசளிப்பு விழாவினை நடத்துவதற்கும் பாடசாலை தவணைப் பரீட்சைகளை ஒழுங்கு செய்வதிலும் ஆசிரியர் நலன்புரி சங்கத்தை வழிநடத்துவதிலும், மலையக ஆசிரியர் சங்க வளர்ச்சியிலும் இவரது வழிகாட்டல் முதன்மையானது.

தொடர்ந்து 01.10.1998 தொடக்கம் நுவரெலியா மாவட்டத்தின் முதன்மை ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்று செயற்பட்டதுடன் 12.03.2007 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் வணிக பாடத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக ஹற்றன் வலயத்தில் கடமையேற்றார். அன்றைய கால வலயப் பணிப்பாளர்களுடன் இணைந்து வணிக பாட அபிவிருத்திக்கு பல செயற்திட்டங்களை முன்னெடுத்தார். இதில் வலய மட்ட வணிக தினமும் பரிசளிப்பு விழாவும் முதன்மையானது.

01.06.2009 தொடக்கம் ஹற்றன் கோட்டம் இலக்கம் 01 இற்கான கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும், 01.04.2012 தொடக்கம் வலய திட்டமிடல் கல்விப் பணிப்பாளராகவும் செயல்பட்டு தகவல்களை கணணிமயப்படுத்துவதில் தன் ஆளுமையை வெளிப்படுத்தினார்.

12.03.2017 தொடக்கம் மேலதிக கல்விப் பணிப்பாளராகவும் 01.01.2018 முதல் கோட்டம்3 இற்கான கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் செயல்பட்டு அப்பகுதி அதிபர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தினார். மலையக மண்ணில், கல்வி நிர்வாக சேவை, கல்வியலாளர் சேவை, அதிபர் சேவை என்பவற்றின் போட்டிப் பயிற்சிக்கான பல செயலமர்வுகளை நடாத்தி அவர்களின் பதவி உயர்விற்கும் வித்திட்டவர்.

கல்விப் புலத்தில் எந்தவொரு தகவல்களையும் கேட்டவுடன் பதில் தரக்கூடிய ஆளுமையும் அறிவும் அவரிடம் அதிகமாகவே உள்ளது. இதுவரை வெளியில் அந்த வெற்றிடம் நிரப்பப்படாமலேயே காணப்படுகின்றது.

01.04.2019 தொடக்கம் வட மாகாணத்தின் மாகாண கல்வித்திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று பிரதிக் கல்விப்பணிப்பாளராக மாகாணக் கல்வி அபிவிருத்தியை பொறுப்பேற்றும் பின் பொது நிர்வாகத்தை பொறுப்பேற்றும் சிறப்பாக சேவையாற்றினார்.



நாளை 09.10.2021 தொடக்கம் ஓய்வு பெறும் எம் வணிகத்துறை பேராசான் தேசிய ரீதியில் சிறந்த கல்வித்துறை வளவாளராகவும் பரீட்சை திணைக்களத்தின் உயர் தர வகுப்பிற்கான வணிகப்பிரிவின் கட்டுப்பாட்டு பரீட்சகராகவும் தன்னை நிலைநிறுத்தி பல கல்விச்சேவையாளர்களை உருவாக்கியுள்ளார் .

மலையகத்தில் நீண்ட காலம் சேவையாற்றியும் யாழ் மண்ணில் இறுதி காலத்தில் சேவையாற்றியும் ஓய்வு பெறும் எம் ஆசானை, ஆலோசகரை, கல்விப்பணிப்பாளரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எம்மை வழிகாட்டி வளப்படுத்திய இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய மலையக மைந்தர்களாகிய நாம் வாழ்த்துகின்றோம்.

**– மலையக இளைஞர்கள் –**



# வவுனியாவில் மீண்டும் 24 பேருக்கு கொவிட்

## ஒருவர் மரணம்

வவுனியாவில் 24 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளார் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப்பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் தாமாக முன்வந்து பரிசோதனை செய்தவர்களின் பீ.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று (வியாழக்கிழமை) இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய தாக மாவட்டம் முழுவதும் கொவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 24 பேருக்கு மேலும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொவிட் தொற்று காரணமாக வவுனியாவில் நேற்று செட்டிகுளம் முதலியார் குளம் பகுதியைச் சேர்ந்த (வயது 63) ஆண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப்பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

நாடு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மூலம் முடக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு 7 நாள்கள் கடந்த நிலையில் மீண்டும் கொவிட் தொற்றுக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே மக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சுகாதாரப்பிரிவினர் கோரியுள்ளனர்.

# காரில் வந்த கொள்ளைக் கும்பல் வடமராட்சியில் மூவரிடம் வழிப்பறி

வடமராட்சிப் பகுதியில் காரில் வந்த கொள்ளைக் கும்பலொன்று, ஒரு மணிநேரத்தில் மூவரிடம் வழிப்பறியில் ஈடுபட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வடமராட்சி - வல்லை மற்றும் வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று வியாழக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வல்லை பகுதியில் வெள்ளை நிற காரில் நின்ற வழிப்பறி கொள்ளையர்கள், வீதியால் வந்த ஒருவரை மறித்து தடுப்பூசி அட்டையை காட்டுமாறு கோரியுள்ளனர்.

அதற்கு அவர் தடுமாறிய நிலையில் அவரிடம் இருந்த பணப்பையை பறித்துக்கொண்டு, கொள்ளைக் கும்பல் காரில் ஏறி அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அதன்பின்னர் அந்தக் கும்பல், வல்வெட்டித்துறை பகுதியில் டிரக்டரில் கல் ஏற்றி வந்தவரை மறித்து கல் ஏற்றி செல்ல அனுமதிப்பத்திரம் இருக்கிறதா? என கேள்வி எழுப்பி, அவரிடம் இருந்த ஒரு தொகைப் பணத்தைப் பறித்துக்கொண்டு, காரில் ஏறி அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறாக குறித்த வழிப்பறி கொள்ளைக் கும்பல், அப்பகுதியில் ஒரு மணி நேர இடைவெளியில் மூன்று நபர்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், காரினுள் அங்கவீனமுற்றவர்கள் பயன்படுத்தும் கைத்தடி ஒன்றும் காணப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளனர்.



# போக்குவரத்துத் துறையை ஊக்குவிக்க அமெ. உதவி

இலங்கையில் போக்குவரத்துத் துறையை ஊக்குவிக்க அமெரிக்க அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் தலைமை அரசியல், பொருளாதார அதிகாரி திருமதி. சூசன் வால்கே தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் நேற்று (வியாழக்கிழமை) போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, நாட்டின் போக்குவரத்துத் துறையின் தரத்தை மேம்படுத்தவும், இதற்காக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் அமைச்சகம் ஒரு நிலைப்பாட்டில் உள்ளது எனத் தெரிவித்தார்.

# மின் கட்டண நிலுவையை செலுத்த சலுகைக் காலம்

நிலுவையிலுள்ள தமது மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த வாடிக்கையாளர்களுக்கு ஒரு வருட சலுகைக் காலத்தை வழங்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே இதனைத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று (வியாழக்கிழமை) கருத்து வெளியிட்ட அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த இரண்டு மாதங்களுக்கு நிலுவையில் உள்ள 4,400 கோடி ரூபாவை நாங்கள் அறவிட வேண்டியுள்ளது.

எனினும், நிலுவைத் தொகையை செலுத்தவுள்ள பாவனையாளர்கள் அதனை 12 மாதங்களில் செலுத்த வாய்ப்பளித்துள்ளோம்.

ஆனால் அந்த மாதத்துக்கான கட்டணத்துடன் அதனை செலுத்த வேண்டும். கட்டணப் பட்டியலில் நிலுவை வைத்திருப்போர் 12 மாதங்களுக்குள் செலுத்தலாம் என்றும் இறுதிப் பட்டியல் அக் காலத்தினுள் செலுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊரடங்குச் சட்ட தளர்வின் பின்னர் மோசமாகும் சுகாதார நடைமுறை!

## உபுல் றோஹண ஆதங்கம்



தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை தளர்த்திய பின்னர் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் மோசமாகி செல்கின்றமை கவனிக்கப்படுகின்றது என பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பொது சுகாதார ஆய்வாளர் சங்கத்தலைவர் உபுல் றோஹண இது தொடர்பில் கருத்துரைக்கும் போது -

கடந்த இரண்டு நாள்களாக மக்களின் நடத்தை முற்றிலும் திருப்தியற்றதாகவும், மிகவும் மோசமானதாகவும் இருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப் போக்குவரத்து மற்றும் பொது இடங்களில் சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்கவில்லை. அத்துடன் சில இடங்களில் முன்னெச்சரிக்கை சுகாதார வசதிகள் திறம்பட பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இது கடந்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர் மக்களின் பொறுப்பற்ற நடத்தையை நினைவூட்டுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுவே ஒரு பேரழிவு நிலைமைக்கு வழிவகுத்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பொதுமக்கள் வெளியில் செல்லும் போது அதிக பொறுப்புடன் இருக்க வேண்டும். மேலும் எந்தவொரு கொவிட் கொத்தணியும் தோன்றுவதற்கு இடமளித்துவிடக்கூடாது என்றும் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

# மல்லாவிப் பெண் தீயில் எரிந்த சம்பவம் தொடர்பில் கணவருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு - மல்லாவி பகுதியில் பெண் ஒருவர் தீயில் எரிந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் கடந்த முதலாம் திகதி தீயில் எரிந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்வாறு தீக்காயங்களுக்கு உள்ளாகிய பெண் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது கணவரை மல்லாவி பொலிஸார் அனிச்சங்குளம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், சந்தேகநபரை மல்லாவி பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.10.2021இல் வெளியிடப்பெற்றது.